முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 25.02.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 108/2024**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நிர்மலா | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | நாகராஜன் | வயது | : | 58 |
| ஊர் | : | செய்யாறு | தொழில் | : | இல்லத்தரசி |

**வா.சா. 1 (நிர்மலா): வாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணை:**

நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கு தாவாவின் சொத்தானது பைங்கிணர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தினை யாரிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால் பரதச்சக்கரவர்த்தியிடம் 2005ம் ஆண்டில் கிரயம் பெற்றேன். நான் கிரயம் பெற்ற சொத்தில்தான் வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டின் மேற்கு பக்கம் காலி இடமா அல்லது வீடு இருக்கிறதா என்றால் வீடு இருக்கிறது அந்த வீடு 2ம் பிரதிவாதியின் தந்தை முனுசாமியின் பெயரில் உள்ளது. தற்போது முனுசாமி என்பவர் உயிரோடு இல்லை. மேற்படி முனுசாமி அவர்களின் சொத்தை எனக்கு முன்னதா அல்லது பின்னதா கிரயம் பெற்றாரா என்றால் எனக்கு முன்பாகவே அவர் சொத்தினை கிரயம் பெற்றிருந்தார்.

2. நான் கிரயம் வாங்கியபோது என்ன பிளாட் எண் கொடுத்தார்கள் என்றால் பிளாட் எண் 9 கொடுக்கப்பட்டது. இறந்துபோன முனுசாமிக்கு பிளாட் எண் 9 தான் கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான். நான் பிழைதிருத்தல் பத்திரம் எதற்காக எழுதிதேன் என்றால் பிளாட் எண் ஆனது தப்பாக இருப்பதனால் அதனை திருத்தம் செய்வதற்காக என்னுடைய தந்தை பிழைதிருத்தல் பத்திரம் எழுதினார். மேற்படி பிழைதிருத்தல் பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1755 சதுரடி என்று குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால சரிதான். முனுசாமி கிரயம் பெற்ற சொத்தானது 1800 சதுரடி என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண்ணானது 99/1பி என்றால் சரிதான். அதேபோல் 1ம் பிரதிவாதியின் சொத்தின் சர்வே எண்ணானது அதே 99/1பி என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போதுதான் தெரிய வருகிறது. என்னுடைய வழக்கு சொத்தின் சர்வே எண்ணும் 1ம் பிரதிவாதயின் சொத்தின் சர்வே எண்ணும் ஒன்றுதான் என்றும் ஆனால் விஸ்தீரணம்தான் வேறு வேறு என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதியாகிய ஜானகிராமன் என்பவர் 2ம் பிரதிவாதி மீதும் 2ம் பிரதிவாதியின் தந்தையான முனுசாமியின்

மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கானது செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் உள்ள அவஎண் 120/2017 ஆகும்.

3. மேற்படி அசல் வழக்கில் 120/2017, 1ம் பிரதிவாதிக்கு சார்பாக தீர்ப்பானதும் அதனை தொடர்ந்து நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் எத்றகாக இந்த அசல் வழக்கு 108/2024னை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கடன் பெறுவதற்காக வங்கியை அணுகியபோது அவர்கள் பிளாட் எண் 9ல் 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள செய்யாறு சார்பு நீதிமன்ற வழக்கானது இருக்கிறது என்றும் அதனால் கடன் கொடுக்கமுடியாது என்றும் கூறிவிட்டார்கள். அதனால் என்னுடைய மனை எண் 9ல் உள்ள வில்லங்கத்தை நீக்குவதற்கு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் என்னுடைய தாவாவில் என்னுடைய விஸ்தீரணமும் 1ம் பிரதிவாதியின் விஸ்தீரணமும் வேறு வேறு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எனக்கு நான் கேட்கும் பரிகாரம் படி தீர்ப்பாக பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது**

**<u>மறுவிசாரணை</u>**

நான் பரதச்சக்கரவர்த்தியிடம் கிரயம் பெற்ற சொத்தின் சர்வே எண்ணானது 99/1பி ஆகும். ஆனால் 1ம் பிரதிவாதியின் ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் சர்வே எண்ணானது 99/1பி1 என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை எதுவும் இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.02.25 17:09:59 +05'30'

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு